**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, LALGUDI.**

**Case No. CC.No. 94 of 2026**

**Prosecution Witness : PW3**

| | | | |
|---|---|---|---|
| **Name** | **: தனலட்சுமி** | **Taluk** | **:** |
| **Father's Name** | **:** | **Calling** | **:** |
| **Village** | **:** | **Age** | **:** |

**(Accused Present)**

**Dated.17.06.2026**

**முதல் விசாரணை**

நான் தற்போது திருவெறும்பூர் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.08.2025ம் தேதி நான் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் நிலைய பொறுப்பில் இருந்த போது காவல் ஆய்வாளரின் உத்தவின் படி, தலைமை காவலர் 501 ராமன், முதல் நிலை காவலர் 1240 சண்முக சுந்தரம் ஆகியோருடன் மது வேட்டை ரோந்து அலுவலாக இலால்குடி காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்தோம். முத்தியூர் மாரியம்மன் கோவில் தெருவில் ஒருவர் அவரது வீட்டின் அருகில் மது பானம் விற்பனை செய்வதாக கிடைக்க ரகசிய தகவலின் பேரில் 10.00 மணிக்கு அங்கு சென்று பார்த்த போது சந்தேப்பபடியாக நின்று கொண்டிருந்து ஒருவர் எங்களை கண்டதும் தப்பி யோட முயன்றவரை பிடித்து விசாரிக்க அந்த நபர் தன் பெயர் பிரேம்குமார் த/பெ, சின்னதுரை மாரியம்மன் கோவில் தெரு, 7/31, திருமண மேடு, லால்குடி தாலுக்கா, திருச்சி என்று

சென்னவரை சோதனை செய்து பார்த்த போது அவர் கையில் இருந்த கட்டைப்பையில் அரசு டாஸ்மார்க் மதுபானம் 180 ML அளவுள்ள Old chef Brandy-26 பாட்டில்கள் இருந்தது. அரசு மதுபானம்(TASMARK) கடைகளில் மதுபானம் பாட்டில்களை மொத்தமாக விலைக்கு வாங்கி வைத்துக்கொண்டு கடை முடியிருக்கும் நேரத்தில் தனக்கு சுய லாபம் கருதி அதிகவிலைக்கு விற்பனை செய்ய வைத்திருப்பதாக கூறினார். பின்பு எதிரி அரசு மதுபானத்தை அரசு உரிமமோ அனுமதியின்றி விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்பனை செய்ய தன் வசம் வைத்திருந்தவரை குற்ற காரணம் கூறி 10.15 மணிக்கு குற்ற காரணம் கூறி கைது செய்தேன். பின்பு எதிரி ஆஜர் செய்த வழக்கு சொத்துகளை பொது மக்கள் யாரும் சாட்சியாக வராததால் என்னுடன் வந்த போலீசார் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து 10.30 மணிக்கு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்பு வழக்கு சொத்து மற்றும் எதிரியுடன் நிலையம் வந்து 11.30 மணிக்கு எதிரி மீது குற்ற எண். 225/2025 U/s. 4(1)(C)-TNP (Amendment)Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.7/அ.சா.3** ஆகும். பின்பு 09.08.2025 ம் தேதி 12.00 மணிக்கு காவல் நிலையத்தின் பின்புறம் மேல் அதிகரிகளின் உத்தரவுப்படி அழித்தல் மகஜர் மூலம் கீழே கொட்டி அழிக்கப்பட்டு, அந்த மகஜர்களில் மேற்படி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். பின்னர் முதல் விசாரணை முடித்து மேல் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் பார்வைக்கு வைத்தேன். காவல் ஆய்வாளர் விசாரிக்க விபரம் சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை(எதிரி தரப்பில்)</u>**

நான் கைபற்றுதல் மகஜரில் சாட்சிகளிடம் சம்ப இடத்தில் வைத்து கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். கைபற்றுதல் மகஜரில் தட்டச்சு செய்யப்பட்டதா அல்லது கையால் எழுதப்பபட்டதா என்றால் சம்பவ இடத்தில் வைத்து கையால் எழுதிவிட்டு பின்னர் நிலையம் வந்து தட்டச்சு செய்யப்பட்டது. சம்பவ இடத்தில் ஒரு முறையும் காவல் நிலையத்தில் ஒரு முறையும் சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தை அழிப்பதற்காக எந்த உயர் அதிகாரியிடம் அனுமதி பெற்றேன் என குறிப்பிட்டு சொல்ல வில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் எந்த தேதியில் விசாரணை செய்தார் என்றால் 09.08.2025 அன்றே விசாரணை செய்தார். எதிரியிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் நீதிமன்றத்திற்கு அனுப்பபடவில்லை என்றால் வேதியல் பகுப்பாய்விக்கு அனுப்பப்படவில்லை என்றாலும் சரிதான். இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் இந்த வழக்கு புள்ளியல் கணக்கிற்காக எதிரி மீது போடபட்ட பொய்யான வழக்கு என்றாலும், வழக்கு ஆவணங்கள் அனைத்தும் காவல் நிலையத்தில் வைத்து பின்னிட்டு தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல.

ஒப்பம்/—சு.அருணாச்சலம்,
நீதித்துறை நடுவர்,
இலால்குடி

/உண்மை நகல்/ ARUNACHALAM Digitally signed by ARUNACHALAM Date: 2026.06.17 17:51:28 +0530

நீதித்துறை நடுவர்,
இலால்குடி